செ.வெ.எண்: 19/ மார்ச் /2020 நாள்: 06.03.2020

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவது தொடர்பான குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (6.03.2020) நடைபெற்றது.

-------------

தமிழ்நாடு அரசிதழில் மத்திய அரசின் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம் - 2016-ன் கீழ் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் விதி – 2018ன்படி மாற்றுத்திறனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் சென்றடைவதை உறுதி செய்தல் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலச்சட்டம் விதிகள் நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்திட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைவராகவும் மாற்றுத்திறனாளிகள் நலனிற்கான மாவட்ட அளவிலான அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகளின் வகையில் பிரதிநிதிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சேவைபுரியும் பதிவு பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளை கொண்டு குழு அமைக்கப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட அரசு உயர் அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகளின் பிரதிநிதிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலனிற்காக செயல்படும் தன்னார்வ தொண்டு நிறுவன நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்காக செயல்படுத்தப்படும் அரசு திட்டங்கள் மற்றும் நலச்சட்ட விதிமுறைகள் அமல்படுத்துதல் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. மாற்றத்திறனாளிகளின் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்ட கருத்துருக்களுக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**